பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 20 வியாழக்கிழமை 05.11.2024 கதிர் 028

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியம் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சபையில்கடும்சவால்காத்திருக்கின்றது என்பதை அருச்சுனா எம்.பி. நேற்று நிரூபித்திருக்கிறார். இவர்கள் ☞ 2

## அடுத்த வருட இறுதியில் தேர்தல்

# புதிய அரசமைப்பு வரை மாகாண சபை தொடரும்

## தமிழ் அரசுக் கட்சியிடம் ஜனாதிபதி உறுதி





புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தமும், மாகாணசபை முறைமையும் தொடரும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார் என்று தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற ☞ 2

## அரச இணைய தளம் மீது மீண்டும் சைபர் தாக்குதல்

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மீது மீண்டும் சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த இணையத்தளம் தற்போது 3ஆம் தரப்பின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது இணையத்தளத்தை மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் ☞ 7

## 3 பல்கலைப் பீடங்களின் பெயர்கள் மாற்றப்பட்டன

பிரதமர் ஹரினி அமரசூரியவினால் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகத்தின் ☞ 7

## பொலிஸ் திணைக்களத்திற்கு ரூ. 3 பில். உடனடி ஒதுக்கீடு

பொலிஸாருக்கான நிலுவை உணவு மற்றும் தங்குமிட கொடுப்பனவுகளை வழங்குவதற்காக 3 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகப் பொதுப் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார ☞ 7

## வடக்கு கிழக்கிற்கு 54 உட்பட 362 மதுச்சாலை அனுமதிகள்

### ரணிலின் குறுகிய ஆட்சியில் விநியோகம்

வடக்கு கிழக்கிற்கு 54 அனுமதிப் பத்திரங்கள் உட்பட, 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஒக்டோபர் 6 வரையான காலப்பகுதியில் கலால் திணைக்களம் 362 மதுபான அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளதாக சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இந்தத் தகவலை அவர் தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் 110 அனுமதிப்பத்திரங்கள் அதிகளவில் வழங்கப்பட்டுள்ளன. தென் மாகாணத்திற்கு 48, வடக்கிற்கு 32, கிழக்கிற்கு 22, மத்திய மாகாணத்திற்கு 45, வடமத்திய மாகாணத்திற்கு 14, வடமேற்கு மாகாணத்திற்கு 30, ஊவா மற்றும் சப்ரகமுவவிற்கு தலா 30 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் 172 உரிமங்கள் மதுபானம் (வைன் ஸ்டோர்ஸ்) சில்லறை விற்பனைக்காக எப்.எல்-4 பிரிவின் கீழ் வழங்கப்பட்டவை.

ரணிலினால் வழங்கப்பட்ட புதிய மதுபான சாலைகளின் அனுமதிப் பத்திரங்கள் பற்றிய முழுமையான விவரங்களில் மாவட்டவாரியாகப் பார்க்கின்றபோது கிளிநொச்சிக்கே அதிகமாக வழங்கப்பட்டுள்ளன.

2024 ஜனவரிக்குப் பிறகு 362 அனுமதிப் பத்திரங்களும் 174 ☞ 7



## புதிய அரசமைப்பில் தமிழருக்கான சம உரிமையை உறுதி செய்யுங்கள்

### நாடாளுமன்றில் சாணக்கியன் வலியுறுத்து

தமிழ் மக்களுக்கும் இந்த நாட்டில் சம உரிமையுள்ளது. உத்தேச புதிய அரசமைப்பில் தமிழர்களின் சமவுரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்த அரசை வீழ்த்துவதோ அல்லது பலவீனப்படுத்துவதோ எமது நோக்கமல்ல . சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடனம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்திக்கு எவ்வாறு நாடு முழுவதும் மக்கள் ஆணை கிடைத்ததோ அதேபோன்று வடக்குகிழக்கில் தமிழ் அரசுக் கட்சிக்கே மக்கள் ஆணை கிடைத்துள்ளது.

அத்துடன் அநுர சுனாமியை எமது மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே தைரியமாக எதிர்த்து நின்றது. அதனால்தான் அங்கு நாம் வரலாற்று வெற்றியைப் பெற்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத் தவரையில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் இன்னும் விடுதலை ☞ 7

## சர்ச்சைக்குரிய கொலைகள் குறித்து மீண்டும் விசாரணை

தாஜுதீன் படுகொலை உட்பட சர்ச்சைக்குரிய படுகொலைகள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவோம் என ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். ☞ 7

## பேச்சு சுதந்திரம் அவசியம் அதை உறுதி செய்வோம்

### அமைச்சர் ஹர்ஷண தெரிவிப்பு

பேச்சு சுதந்திரம் அவசியமானது என்றும், அதனை உறுதிப் படுத்துவதற்கு ஆளும்தரப்பு செயற்படும் எனவும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் நவம்பர் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்ட ஆளும்தரப்பின் ☞ 7

## ஸ்டெம் கல்விக் கட்டமைப்பை இலங்கையில் அறிமுகப்படுத்துக

### முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. கோரிக்கை

இலங்கையின் கல்விகட்டமைப்பில் 'ஸ்டெம்' கல்வி கட்டமைப்பை அறிமுகப்படுத்த வேண்டும். இதனூடாக நாட்டில் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்துக்கொள்ள முடியும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

159 ஆசனங்களுடன் ஆளும்தரப்பு ஆட்சியமைத்துள்ளது. மக்களின் வாழ்க்கையில் புதிய மாற்றம் ஏற்பட வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் நிறைவேறவேண்டும். நாட்டின் நலன் கருதி ஆளும்தரப்பு எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

கடந்த வாரம் நிலவிய சீரற்ற காலநிலையால் மட்டக்களப்பு மாவட்டம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. வீடுகள், விளை நிலங்கள், வீதிகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ள அனர்த்தின் போது உடன் உதவிகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை இனி வரும் காலங்களில் முன்னெடுக்க வேண்டும்.

வெள்ளப்பெருக்கு ஏற்படுதற்கான காரணிகளை இனங்கண்டு வீதி கட்டமைப்புக்களை புனரமைக்க வேண்டும். இவ்விடயம் குறித்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க எம்முடன் தொடர்புக் கொண்டார். வீதி அபிவிருத்திக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி தனது கொள்கைப் ☞ 7

## மாவீரர் தின நிகழ்வுகளில் 10 புலிகளின் சின்னங்கள்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

வடக்கில் நடைபெற்ற 244 மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளில் 10 இடங்களில் விடுதலைப்புலிகளின் சின்னங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஆளும்தரப்பின் கொள்கை பிரகடனத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நவம்பர் மாதம் 21 முதல் 27 ஆம் திகதி வரையான மாவீரர் நாள் வாரத்தில் வடக்கில் 244 நினைவேந்தல்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவற்றில் 10 இல் மட்டும் விடுதலைப் புலிகளின் சில சின்னங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. பொலிசார் இதுதொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

சமீபத்தில் மாவீரர்கள் நாள் தொடர்பில் பல கருத்துக்கள் வெளியாகியிருந்தன. அனைவருக்கும் தங்கள் அன்புக்குரியவர்களை ☞ 7

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

எல்லோருக்கும்ஒருபடிமேலேபோய்தலைவர் பிரபாகரனுக்கும்வணக்கம்தெரிவித்துத்தான் தனதுகன்னிஉரையைத்தொடங்கியிருக்கிறார் அவர். இனி பழைய தமிழ் எம்.பிக்களின் புலிகள் சார்பு வீராவேசப் பேச்சுக்களும் நாடாளுமன்றத்தில் செல்லபடியாகாது என்று கட்டியம் கூறும் அளவிற்கு அருச்சுனாவின் உரை அமைந்தது. அதேநேரம் அத்தகைய பேச்சினால்ஏற்படக்கூடியஎதிர்விளைவுகளைக் கருத்தில் கொள்ளும் புத்திசாலித்தனமும் அவரிடம் இருக்கிறது.

"என் உயிரிலும் மேலான என் இனத்தின் மானம் காத்த வீரத் தமிழன் இருந்தால் தலைவன் இல்லையேல் இறைவன் எனப் போற்றப்படுகின்ற அன்புக்கும் மதிப்புக்கும் உரிய மேதகு அவர்களுக்கும், அவர் காட்டிய வழியில் உயிரைத் துச்சம் என மதித்து என் இனத்தின் மானம் காத்த வீர மறவர்களுக்கும் அதேபோல் இதுவரை காலமும் நடந்த இந்தக் கோர யுத்தத்தால் பாதிக்கப்பட்ட உயிரிழந்த சகல முஸ்லிம், சிங்கள, தமிழ் இளைஞர்களுக்கும் ஜே .வி.பியில் உயிர்நீத்தவர்களுக்கும் முதற்கண் எனது வீர வணக்கத்தையும் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்'' - என்று கூறிவிட்டே தனது உரையை அருச்சுனா தொடங்கினார்.

எதைப் பேசினால், எங்கே தட்டினால் தமிழர்களின்உணர்வுகளைக்கிளர்ச்சியடைய வைக்கலாம் என்பதை நன்கு தெரிந்து வைத்திருக்கும் அருச்சுனா மாகாண சபைத் தேர்தல்களிலும் சாவகச்சேரி உள்ளூராட்சித் தேர்தலிலும்கூட மற்றைய தமிழ்க் கட்சிகளுக்குப் பெரும் சவால்தான். அவரை மனநிலைப் பிறழ்வுள்ளவர் என்று பழிப்பதை நிறுத்திவிட்டு, யதார்த்தத்தை ஏற்று அந்த அரசியல் சுழலை எப்படிச் சமாளிப்பது என்பதில் அரசியல் கட்சிகள் கவனம் செலுத்தாவிட்டால் அவை மீண்டும் அடிவாங்குவது உறுதி.

....................................

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ரணில் தலைமையிலான புதிய ஜனநாயகக் கூட்டணி ஆகியன இன்னமும் தமது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிக்கவில்லை. பலரும்அந்தப்பதவிகளைப் பெறப் போட்டியிடுவதால் அந்த நியமனங்கள் இன்னமும் செய்யப்படவில்லை.

புதிய ஜனநாயகக் கட்சிக்கு 2 தேசியப்பட்டயல் இடங்கள் கிடைத்தன. அவற்றில் ஒன்றை ரவி கருணாநாயக்க ஏற்கனவே தனதாக்கிக் கொண்டார். கட்சியின் ஆலோசனையோபரிந்துரையோஇன்றிகட்சிச் செயலாளர்தனதுஆள்என்பதால்அவர்அந்தப் பதவியைப்பிடுங்கிக்கொண்டார். எஞ்சியுள்ள ஒரு தேசியப் பட்டியலையும் எனக்குத் தா உனக்குத் தா என்று முண்டியடிக்கிறார்கள் கூட்டணியில் உள்ளவர்கள். சுதந்திரக் கட்சி அந்தப் பதவி தனக்கு வேண்டும் என்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியோ அது தனக்கே வேண்டும் என்கிறது. பெரமுனவில் இருந்த பிரிந்து வந்தவர்களோ அதனைத் தமக்கே தரவேண்டும் என்கிறார்கள்.

யாருக்கும் தராமல் அதை வைத்துக் கொண்டிருக்கிறார் ரணில். கடந்தமுறையும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் இடத்தையும் இப்படித்தான் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலத்திற்கு இழுத்தடித்துவிட்டு கடைசியில் தானே அந்த இடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினராகிப் பின்னர் ஜனாதிபதியுமாகி இருந்தார். இம்முறையும் அப்படி ஏதாவது திட்டங்களை வைத்திருக்கிறாரோ தெரியாது.

தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்கள்அல்லதுவேட்புமனுத் தாக்கலின்போதே தேசியப் பட்டியல் வேட்பாளர்கள்எனப்பெயர்குறிப்பிடப்பட்டோர் ஆகியோரில் ஒருவரைத்தான் தேசியப் பட்டியல்மூலம்நாடாளுமன்றஉறுப்பினராக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு சட்ட வியாக்கியானம் கொடுத்தாலும், சட்டத்தில் அப்படியெல்லாம் ஒன்றுமில்லை யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் என்று விளக்கம் கொடுக்கும் மேதைகளும் இருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் தேர்தலில் போட்டியிடாத, தேசியப்பட்டியலில் பெயரிடப்படாத ரணில் நாடாளுமன்றம் செல்வதற்கான வாய்ப்புக்களை மறுக்க முடியாது. அவர் எதை எப்போது செய்வார் என்பது அவருக்கு மட்டுமே வெளிச்சம்.

....................

தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளை மறுசீரமைக்கப்பட்டி-ருக்கின்றது. இந்தக் கிளையின் தலைவராக கடந்த பல வருடங்களாக சட்டத்தரணி தவராசாவே பதவி வகித்து வந்தார். கடந்த பொதுத் தேர்தலுடன் அவர் கட்சியிலிருந்து விலகி சுயேச்சையாக மாங்காய் சின்னத்தில் போட்டியிட்டார். தமிழ் அரசுக் கட்சியிலிருந்து தான் விலகி விட்டார் என்றும் அறிவித்திருந்தார். இதையடுத்து கட்சியின் கொழும்புக் கிளைக்கான புதிய நிர்வாகிகள் நேற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கட்சியின்செயலாளர்மருத்துவர்சத்தியலிங்கம் முன்பாகஇந்தத்தெரிவுகள்நடந்தன. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் அதில் கலந்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாதபோதும் கட்சி நிர்வாகத்திலிருந்தும் அரசியலில் இருந்தும் தான் ஓய்வு பெறவோ ஒதுங்கவோ போவதில்லை என்பதையும் கட்சியை மீளக் கட்டியெழுப்பி அதனைத் தனது முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டு வருவதில் தீவிர கவனம் செலுத்துவார் என்பதையும் பறைசாற்றும் வகையில் சுமந்திரனின் இந்த நகர்வு பார்க்கப்படவேண்டும். பொதுத் தேர்தல் வெற்றியோடு கட்சி தனது கட்டுப்பாட்டுக்குள் வரும் என்றும் அதனால் ரெலோ, புளொட் போன்ற கட்சிகளோடு இணைந்துகொண்டு தனது ஆதிக்கத்தை நிலைநாட்டலாம் என்றும் எதிர்பார்த்திருந்த சிறீதரன் எம்.பிக்கு அரசியல் களம் கடும் சவால் மிக்கதாகவே இருக்கப் போகின்றது என்பதையே இது கோடிகாட்டுகின்றது.

நேற்றைய கூட்டத்தில் கொழும்புக் கிளையின் முன்னாள் செயலாளரான இரத்தினவடிவேல் தலைவராகவும், மலர்விழி செயலாளராகவும், முத்துக்குமாரசாமி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் ஐவர் மத்திய செயற்குழு உறுப்பினர்களாகவும்தெரிவுசெய்யப்பட்டனர்.

கட்சியின் கொழும்புக் கிளை என்பது ஓர் அடையாச் செயற்பாட்டு மையம் மட்டுமே. கொழும்பில் தமிழ் அரசுக் கட்சி போட்டியிடுவதில்லை. வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டில் கட்சி இருப்பதால் அதற்குவெளியேபோட்டியிடுவதில்லைஎன்கிற வாதத்தின் அடிப்படையில் இதனைப் பின்பற்றி வருகின்றனர். அதனால் கொழும்புக் கிளை என்பது ஒரு சம்பிரதாயக் கிளை மட்டுமே.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



உறுப்பினர்கள் கூறுகின்றனர். அதேவேளை இந்தச் சந்திப்புக் குறித்து தகவல் வெளியிட்ட ஜனாதிபதி ஊடகப் பிரிவு தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்றஉறுப்பினர்கள்நீண்டகாலமாக வடக்கு கிழக்கு மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளித்தனர் என்று தெரிவித்தது.

இந்தச்சந்திப்பின்போது 2025 பிற்பகுதியில் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படும் ஜனாதிபதி உறுதியளித்தார் என்றும் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.



இந்தச்சந்திப்பில்நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சத்தியலிங்கம், குகதாசன், சாணக்கியன், ஸ்ரீநேசன், கோடீஸ்வரன், சிறிநாத், ரவிகரன் ஆகிய 8 பேரும் கலந்துகொண்டிருந்தனர்.

மாகாண சபைகளை ஜேவிபி ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் அவைஒழிக்கப்படும்என்றுஅந்தக் கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா'வீரகேசரி'வாரவெளியீட்டுக்குவழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார். இது தமிழ் மக்கள் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்புக்களை எதிர்கொண்டது. அதையடுத்துதமிழ்அரசுக்கட்சி நாடாளுமன்றஉறுப்பினர்கள்ஜனாதிபதியுடன் சந்தித்து இது குறித்துப் பேசுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தச் சந்திப்பு தொடர்பில் சாணக்கியன் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது அரசியல்தீர்வுகுறித்துக்கலந்துரையாடப்பட்டது. தமிழ்மக்களின்இனப்பிரச்சினைக்கானதீர்வாக இணைந்த வடக்கு, கிழக்கில் சுயநிர்ணய உரிமையுடன்கூடியசமஷ்டிஅடிப்படையிலான தீர்வை வழங்கவேண்டும் என்பதே தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடாக இருக்கின்றது என்பதைக் குறிப்பிட்டோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகையில், தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு அதில் உள்வாங்கப்படும், தமிழ்த்தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இதுபற்றி நிச்சயமாகக் கலந்துரையாடப்படும் என்று ஜனாதிபதி கூறினார்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்வரை அரசமைப்புக்கான 13 ஆம் திருத்தச்சட்டமும், மாகாணசபை முறைமையும் தொடரும் என்றும் இவ்வருடம் இரண்டு தேர்தல்கள் நடத்தப்பட்டதன் காரணமாக உடனடியாக மாகாணசபைத்தேர்தல்களை நடத்துவது சாத்தியமில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

உயர்நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அடுத்தவருடஆரம்பத்தில்உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களும், அடுத்த வருடத்தின் இறுதியில் மாகாணசபைத் தேர்தல்களும் நிச்சயமாக நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப் பட்டிருக்கும்அரசியல்கைதிகளைவிடுவிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுவலியுறுத்தினோம். கடந்தகாலங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளுக்கு மேலதிகமாக, தற்போது அச்சட்டத்தின்கீழ் இடம்பெறும் கைதுகள் குறித்தும் தெரியப்படுத்தினோம்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, பயங்கரவாதத்தடைச்சட்டத்தைநீக்கவேண்டும் என்ற தமது கடந்தகால நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருக்கிறார் எனவும், அச்சட்டத்தை நீக்கி, சர்வதேச நியமங்களுக்கு அமைவாகப் பிறிதொரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கைஎடுக்கப்படும்என்றும்குறிப்பிட்டார்.

வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்துக்கொண்டு வந்திருந்தோம். காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கின்றனவா என்று ஜனாதிபதி அங்கு கேள்வி எழுப்பினார்.

அச்சமயத்தில், அந்த அலுவலகத்திற்கு சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் இல்லை என்பதாலும், கடந்தகால ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளாலும் பாதிக்கப்பட்டதரப்பினர்காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் மீது நம்பிக்கை இழந்திருப்பதைச் சுட்டிக்காட்டினோம். நீதிமன்றப் பொறிமுறையொன்று அவசியம் என்பதையும் வலியுறுத்தினோம்.

மகாவலி குடியேற்றம், தொல்பொருள் திணைக்களம், வன இலாகா, கடற்சூழல் பாதுகாப்பு தரப்பு, படையினர் உள்ளிட்ட தரப்புக்களால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடி விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பார் எனவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் ஏற்கனவே அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில், இன்னமும் அங்கு கணக்காளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை என்ற விடயத்துக்கு பொதுநிர்வாக அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி இதற்கு உடனடியாகத் தீர்வு வழங்குவார் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு தான் முன்னுரிமை வழங்குவேன் என்றும், ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிஉறுப்பினர்கள்என்றவேறுபாடின்றி சகலருக்கும் ஒரேவிதமாக அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

தமிழ் அரசுக் கட்சி கடந்த காலத்தில் இருந்த ஜனாதிபதிகளிடத்தில் தெரிவித்த கருத்துக்களையே ஜனாதிபதி அநுரகுமாரவிடத்திலும் குறிப்பிட்டுள்ளோம். அவர் அந்த விடயங்கள் தொடர்பில் வாக்கறுதிகளை வழங்கியுள்ளார். அவற்றை நிறைவேற்றுவார் என்ற எதிர்பார்ப்பு எமக்குள்ளது. அத்துடன் தொடர்ச்சியாக அவருடன் பேச்சு நடத்துவதற்கும் எதிர்பார்த்துள்ளோம் - என்றார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசினோம். சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பில் புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போதே கவனத்தில் கொள்ளமுடியும் என அவர் எம்மிடம் குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருட இறுதிக்குள் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எம்மிடம் உறுதியளித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் அவர் எம்மிடம் எதுவும் கூறவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நீதிமன்ற உத்தரவின்படி நடத்த ஏற்பாடு செய்யப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

காணாமல்போனோர் விடயத்தில் தம்மால் உடனடியாகஎதுவும்செய்ய இயலாது என்றும், படிப்படியாக அந்த விடயத்துக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம் என்பவற்றின் செயற்பாடுகள் குறித்து தொடர்ந்து பேசுவார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

காணிகள் விடுவிப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# 10 நாள்களாக தண்ணீர் இல்லை காரைதீவில் மக்கள் கடும் அவதி

## பாதிக்கப்பட்டோர் கொதிப்பு; ஆர்ப்பாட்டத்திற்கு முஸ்தீபு

(சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் பிரதான பாரிய நீர்க்குழாய் உடைத்தெறியப்பட்ட காரணத்தால் கடந்த பத்து நாள்களாக காரைதீவுக் கிராமத்திற்கு குழாய் நீர் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

தற்காலிகமாக, மாவடிப்பள்ளி இணைப்பிலிருந்து குடிநீர் விநியோகத்தை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காரைதீவுபிரதேசகாரியாலய பொறுப்பதிகாரி விஜயரெத்தினம் விஜயசாந்தன் கூறுகையில் -

மாவடிப்பள்ளியில் இருந்து இன்று பெறப்படுகின்ற குடி நீர் காரைதீவில் வலயம் வலயமாக மாற்றி மாற்றி விநியோகிக்க இருக்கின்றோம். பிரதான குழாய்த்திருத்தம் எப்போது முடியும் என்று தற்போது கூற முடியாதுள்ளது. - என்றார்.

அதனிடையில் பிரதேசசபை முதல் தன்னார்வ அமைப்புகள், சமூக செயற்பாட்டாளர் என்று பல தரப்பினர் வவுஸர் மூலம் வீதி வீதியாக குடிநீர் வழங்கிவருகின்றனர்.

எனினும்பிரதானநீர்விநியோகம்சீர்செய்வது தொடர்பில்இதுவரைநாடாளுமன்றஉறுப்பினர் உதுமாலெப்பையைத் தவிர வேறு யாரும் கவனம் எடுக்கவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இத்தடை தொடர்பாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவிப் பொது முகாமையாளர் உயர் அதிகாரிகள் நாடாளுமன்றஉறுப்பினர்கள் உரியநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

நிந்தவூர் சாய்ந்தமருதைப் பொறுத்தவரை அருகில்இருந்துகுடிநீர்பெறப்படுவதால்பாரிய தட்டுப்பாடு இல்லை என்று கூறப்படுகிறது.

ஆனால் காரைதீவுக்கு ஒரு வழியிலும் நீர் விநியோகம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் காரைதீவு பொது மக்கள் கொதிப்படைந்துள்ளனர். குடிநீர் இன்று வரும், நாளை வரும் என்று எதிர்பார்த்த மக்களுக்கு கடந்த பத்து நாள்களாக கிடைத்தது ஏமாற்றமே.

பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கையில் -

விடயங்கள் பெயரளவில் இருப்பதாகவும் குழாய் நீர் திருத்த செயற்பாடுகள் மந்தகதியில் நடைபெறுவதாகவும் அறியமுடிகிறது.

சபையின் பொறுப்பாளிகள் மக்களுக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக எதனையும் சொல்லவில்லை.

களியோடை அருகே சேதமடைந்த பாலம் நிரந்தரமாக திருத்தப் படுகிறது. பாராட்டுக்கள்.

ஆனால் அத்தியாவசிய தேவையான தண்ணீர் தொடர்பாக இவ்வாறு பாராமுகமாக இருப்பது கவலை அளிக்கின்றது. பாரபட்சம் காட்டப் படுகிறது என்று கருதுகிறோம்.

விடயம் அறிந்த சமூக சேவையாளர்கள் உண்மை நிலையை அறிந்து செயற்பாட்டை துரிதப்படுத்த அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்தோ அல்லது திறம்பட நடந்தால் அவர்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமோ இன்னும் துரிதப்படுத்தலாம்.

உண்மையில் மந்த கதியில் நடந்தாலோ அல்லது ஏதாவது இழுபறிகள் தடைகள் இருந்தாலோ ஜனாதிபதியின் 24 மணிநேர மக்கள் குறை சேவைக்கு அறிவித்து விடயத்தை ஒரு பொது ஆர்ப்பாட்டம் மூலம் கவன ஈர்ப்பு செய்வது அவசியமாகிறது.

இச் செயற்பாட்டிற்கு பொது கட்டமைப்புகள், மக்கள் சேவையாளர்கள், மனிதாபிமான செயற்பாட்டாளர்கள் இருந்தால் முன்வர வேண்டும். என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஒப்பந்த வேலைசெய்யும் தனியார் நிறுவனம் மோசடி செய்த குற்றச்சாட்டின் கீழ் முற்றுகை

## வவுனியாவில் சம்பவம்

ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்ட கொழும்பை தலைமையாக கொண்ட தனியார் நிறுவனம் ஒன்று பல லட்சம் ரூபா பணங்களை அவர்களின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கவில்லை எனத தெரிவித்து குறித்த நிறுவனத்தை வெளியேற விடாது முற்றுகையிட்ட சம்பவம் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, குருமன்காடு, காளி கோவில் வீதியில் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சொந்தமான வீட்டில் குறித்த தனியார் ஒப்பந்த நிறுவனம் இயங்கி வந்துள்ளது.

குறித்த நிறுவனம் வீதி புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் செய்து வந்துள்ளது. அந்நிறுவனத்தினரை வீட்டு உரிமையாளரான நாடாளுமன்ற உறுப்பினர் வீட்டை விடுமாறு விடுத்த கோரிக்கைக்கு அமைய அவர்கள் அந்த வீட்டில் இருந்த தமது பொருள்கள், வாகனங்கள், உபகரணங்களுடன்





வெளியேறினர்.

இதன்போது அங்கு சென்ற, குறித்த நிறுவனத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் வழங்கியோர், கிரவல் மண் வழங்கியோர், வாகனம் வழங்கியோர், வாகன திருத்துனர், சாப்பாடு வழங்கியோர் என பலரும் முற்றுகையிட்டு கடந்த 3 வருடமாக தமக்கு ஒப்பந்த அடிப்படையில் செய்துகொள்ளப்பட்ட பணம் வழங்கப்படாமல் உள்ளதால், அந்த பணத்தை வழங்கிய பின்னர் அங்கிருந்து வெளியேறுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனால் அங்கு முறுகல் நிலை ஏற்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா பொலிஸார் இரு சாராரது கருத்துக்களையும் கேட்டதுடன், நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து, குறித்த தனியார் நிறுவனத்தின் உயர் மட்ட குழுவினர் கொழும்பில் இருந்து வரவுள்ளதாகவும், அதுவரை குறித்த நிறுவனம் அந்த வீட்டில் இருந்து வெளியேற மாட்டார்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனை ஏற்று முற்றுகையில் ஈடுபட்டோர் வெளியேறிச் சென்றனர்.

குறித்தநிறுவனம்தமக்குஒப்பந்தஅடிப்படையில் பல்வேறுவிநியோகங்களைமேற்கொண்டவர்களுக்கு ஒன்றரை கோடிக்கு மேல் பணம் செலுத்தவில்லை என பொலிஸாரிடம் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

(100)

# பொத்துவிலில் நடுநிசியில் யானைகள் அட்டகாசம்

## மயிரிழையில் உயிர் தப்பிய அறுவர்

(சகாதேவராஜா)

பொத்துவில் பிரதேசத்தில் உள்ள கோமாரி மற்றும் செல்வபுரம் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் யானைகள் பலத்த அட்டகாசத்தை புரிந்துள்ளன.

கோமாரிப் பகுதியில் சண்முகம் திலகராசா (வயது 48) என்பவரின் வீட்டை உடைத்து அங்கிருந்த நெல்லை உறிஞ்சி குடித்துள்ளது.

அது மாத்திரம் அல்ல, அங்கு சமையலறையில் இருந்த அங்கர் பால்மா மற்றும் பல உணவு பண்டங்களை சாப்பிட்டிருக்கிறது.

மொத்தத்தில் அந்த வீடு உடைத்து சேதமாக்கப்பட்டிருக்கின்றது .

அப்போது உள்ளிருந்த மூன்று பெண் பிள்ளைகளும்தாயும்தகப்பனும்பின்னாலுள்ள ஜன்னல் வழியாக பாய்ந்து மயிரிழையில் தப்பி ஓடி இருக்கின்றார்கள். இல்லாவிட்டால் அவர்களையும் அடித்து கொன்றிருக்கும்.

அடுத்த சம்பவம் செல்வபுரத்தில் அதே நேரத்தில் இடம்பெற்றது.

அங்கே சுமார் மூன்று வீடுகளை மதில்களை உடைத்து சேதமாக்கி இருக்கின்றது.

பொத்துவில் கோமாரி பிரதேசத்திலே கடந்த இருமாதங்களாக யானையின்





தாக்குதல் கூடுதலாக இருக்கின்றது. இருவர் கொல்லப்பட்டனர்.

ஆனால், இதுவரை தாக்குதலை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றார்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி

**மாகாண சபைகளை ஒழிப்பது குறித்த சர்ச்சை உடனடியாகவே ஒரு முடிவுக்கு வந்துள்ளது. தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை நேற்றுச் சந்தித்த அரசுத் தலைவர் அ–நுரகுமார திசநாயக்க ஆளும்தரப்பின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார். அதற்கு முன்பாக அமைச்சரவைப் பேச்சாளரும் இந்த விடயத்தில் ஆளும் தரப்பின் நிலையைத் தெளிவுபடுத்தியிருந்தார்.**

**தமிழரின் அரசியல் தேவைகளை ஈடுசெய்யும் விதத்தில் அமைந்த புதிய அரசமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும் வரையும் மாகாண சபைகள் நடைமுறையில் இருக்கும் என்பதே ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்பது இப்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதற்கும் ஒருபடி மேலே போய் அடுத்த ஆண்டின் பிற்பகுதியில் மாகாண சபைத் தேர்தலைத் தான் நடத்துவார் என்று அரசுத் தலைவர் உறுதியளித்துள்ளார்.**

**அதுபோன்றேபுதியஅரசமைப்புமுயற்சிகள்3வருடங்களின் பின்பே தொடங்கப்படும் என்றும் அதுவரையில் மாகாண சபைகள் இயங்கும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார். ஆக மொத்தத்தில் இன்னும் குறைந்தது 2 வருடங்களுக்கு அதிகபட்சமாக மூன்றரை வருடங்களுக்கு என்ற குறைப் பதவிக் காலத்திற்கு மாகாண சபைகள் வாழும் என்று எதிர்பார்க்கலாம்.**

**அப்படி ஒரு குறைப் பதவிக் காலத்திற்காக பெரும் நிதியைச் செலவிட்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தத்தான் வேண்டுமா என்கிற கேள்வி ஒருபுறமிருக்க, தமிழருக்கான நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று காணப்படும்வரை மாகாண சபைகளின் இருப்பு அவசியம் என்பதுதான் அனைவரதும் கருத்தாக இருக்கின்றது. மாகாண சபைகளை அதிகாரப் பகிர்வின் தொடக்கமாகக்கூடத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை தற்போதைய ஆளும் தரப்பும் புரிந்துகொண்டுள்ளது. இருந்தாலும் அதிகாரப் பகிர்வுக் கட்டமைப்பு ஒன்றின் மூலமே தமிழர்களுடனான பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதை, நிர்ப்பந்ததின் பின்பேனும் பௌத்த, சிங்கள பேரினவாதம் ஏற்றுக்கொண்டதன் அடையாளமாக இருக்கும் மாகாண சபையை இழப்பதென்பது, மீண்டும் ஒற்றையாட்சி ஒரே அலகு என்கிற பௌத்த சிங்கள சிந்தனைவாதத்திற்குள் இலங்கையை இழுத்துச் செல்வதாக முடிந்து விடும் என்பதாலேயே மாகாண சபைகளின் இருப்பு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. அது தொடரவேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.**

**மாகாண சபைகள் வெள்ளை யானைகள், நிதி விரயச் செயற்பாடு என்பதை மறுப்பதற்கில்லை. தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வுக் கட்டமைப்பை வழங்குவதற்குப் பதிலாக ஒருவித அதிகாரப் பரவலாக்கல் செயற்பாடாகவே ஜே.ஆர்.ஜெவர்த்தன 9 மாகாண சபைகளை உருவாக்கி, அவை அதிகாரப் பகிர்வுக் கட்டமைப்பாகாமல் பார்த்துக்கொண்டார். எனவே புதிய அரசமைப்பில் இந்த வெள்ளை யானையைத் தொடர்ந்தும் கட்டி மேய்க்காமல் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு அலகுகளை மட்டும் கொண்டதாக முழு இலங்கைக்குமான அதிகாரப் பரவலாக்கமாக அன்றி, தேவைக்கான அதிகாரப் பகிர்வாக ஒரு தீர்வைக் கண்டறிவதே சிறந்தது.**

**அத்தகைய ஒரு தீர்வு கிட்டும்போது மாகாண சபைகளின் தேவை தானாகவே இல்லாமல் போய்விடும். அது குறித்த சர்ச்சைகளும் எடுபடாது.**

# இம்முறை ரணிலின் வலையில் சிக்கிய ஜேவிபி



ஜே.வி.பி 2004 பொதுத் தேர்தலில் 39 ஆசனங்களை வென்றதன் மூலம் இலங்கையில் முதல் முறையாக அதிக எண்ணிக்கையிலானபாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றது. ஜே.வி.பி. அந்தப் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் (SLFP) சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை (UPFA) உருவாக்கியது. அப்போது பிரதமராக இருந்தவர் ரணில் விக்கிரமசிங்க. அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் (LTTE)கையொப்பமிட்ட போர்நிறுத்த உடன்படிக்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) செய்துகொண்ட உடன்படிக்கை என்பவற்றுக்கு எதிராகவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ரணில் செய்துகொண்ட ஒப்பந்தம் மக்கள் மீது பெரும் வரியைச் சுமத்தியது. வற் வரி எகிறியது. போர் நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக மக்களை ஒன்றிணைக்க தேசப்பற்றுள்ளதேசிய இயக்கம்என்றஅமைப்பையும் ஜே.வி.பி. உருவாக்கியிருந்தது. இந்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர்கள் ஜே.வி.பி.யை பிரதிநிதித்துவப்படுத்தும் விமல் வீரவன்ச, உலக கிரிக்கட் சம்பியன் அர்ஜுன ரணதுங்க, எல்லே குணவன்ச தேரர் மற்றும் இலக்கியவாதி குணதாச அமரசேகர ஆகியோராவர். இந்தத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இன்று ஜே.வி.பி யினால் நிறுவப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் முன்மாதிரியாகும்.

தேசியமக்கள்சக்தியைப்போலவே,தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமும் கலைஞர்கள் மற்றும் புத்திஜீவிகளை உள்ளடக்கியது. தேசிய மக்கள் சக்தியின் தற்போதைய நட்சத்திரம் ஹரிணி அமரசூரிய. தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் நட்சத்திரம் அர்ஜுன ரணதுங்க. ஒரே வித்தியாசம் என்னவென்றால், ஜே.வி.பி. 2004 பொதுத் தேர்தலில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் கீழ் போட்டியிடவில்லை, ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் ஸ்ரீ.ல.சு.க.வுடன் இணைந்து போட்டியிட்டது 20 வருடங்கள் கழித்து 2024 பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் கீழ் போட்டியிட்டது. வெற்றிபெற்றது.

ஜேவிபிதான்விமல்வீரவன்ஸவைதேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஹீரோவாக்கியது. ஜேவிபியின் இன்றைய தலைவர் அனுர, தேசிய மக்கள் சக்தியின் ஹீரோவாக இருக்கிறார். ரணிலின் ஆளும்தரப்புக்கு எதிராக ஜே.வி.பி தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தை உருவாக்கியது. அதே ஜே.வி.பி 2019 இல் மைத்திரி– – ரணில் ஆளும்தரப்புக்கு எதிராக தேசிய மக்கள் சக்தியை ஆரம்பித்தது. 2024 இல் ரணிலின் ஆட்சிக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி ஒரு பெரிய சக்தியாக கட்டியெழுப்பப்பட்டது.

ஜே.வி.பி. 2002 – –2004 வரை ரணிலின் ஆளும்தரப்புக்கு எதிராக நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் மற்றும் சத்தியாக்கிரகங்களை நடத்தியது, ரணிலின் போர் நிறுத்த ஒப்பந்தம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்திற்கு எதிராக நாட்டை ஒன்றிணைத்தது. போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்தும் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையிலிருந்தும் ஜேவிபி – சுதந்திரக் கட்சி ஆளும்தரப்பு விலகும் என்ற உறுதிமொழியை சந்திரிக்காவிடம் இருந்து பெற்றுக்கொண்ட பின்னரே ஐக்கள் மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கான உடன்படிக்கையில் ஜே.வி.பி. கைச்சாத்திட்டது.



2004 பொதுத் தேர்தலில் பல மாவட்டங்களிலும் சுதந்திரக் கட்சி அதிக இடங்களை ஜேவிபிக்கு ஒதுக்கியது. அதனால் ஜே.வி.பி. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. பண்டாரநாயக்கவின் கோட்டையான கம்பஹாவில்விருப்புவாக்குகள்எண்ணப்பட்டபோது, பண்டாரநாயக்காவின் முடிக்குரிய இளவரசர் இரண்டாவது இடத்திற்கு வீழ்ந்தார். கம்பஹாவில் முதலிடத்தைப் பெற்றவர் விஜித ஹேரத். ஏனைய மாவட்டங்களிலும் ஜே.வி.பி வேட்பாளர்கள் சுதந்திரக் கட்சியினரைத் தாண்டி முதலிடத்தைப் பிடித்தனர். உண்மையில், 2024 மற்றும் 2004 இல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் ஜேவிபிக்கே வாக்களித்தனர். ஜே.வி.பி.யின் உதவியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அன்று ஆட்சிக்கு வந்தது.இன்று அது தலைகீழாக நடந்துள்ளது.

2004இல் சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆளும்தரப்பில் நான்கு ஜேவிபி அமைச்சர்கள் இருந்தனர். விவசாய அமைச்சராக அநுரகுமார இருந்தார். லால்காந்த கிராமிய பொருளாதார அமைச்சராக இருந்தார். சந்திரதாச விஜேசிங்க மீன்பிடித்துறை அமைச்சராக இருந்தார். விஜித ஹேரத் கலாசார அமைச்சராக இருந்தார். பிமல் ரத்நாயக்க, சுனில் ஹந்துன்நெத்தி, சமந்த வித்யாரத்ன, மற்றும் நிஹால் கலப்பட்டி ஆகியோர் அவர்களின் பிரதி அமைச்சர்களாக இருந்தனர். ஜே.வி.பி.யுடன் உடன்பட்டது போல், சர்வதேச நாணய நிதியத்துடன் ரணில் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தில் இருந்து சந்திரிகா விலகினார். உலக வங்கியும் இலங்கையில் உள்ள தனது அலுவலகத்தை மூடிவிட்டு வெளியேறியது. ஆனால், வாக்குறுதியளித்தபடி போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து சந்திரிகா விலகவில்லை. எனினும், போர் நிறுத்த உடன்படிக்கையின் கீழ் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் அவர் ஆர்வம் காட்டவில்லை.ரணிலின்ஆட்சிக்காலத்தில்விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சில் இருந்து விலகியதை அவர் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார். இதனால் ஜே.வி.பி. மகிழ்ச்சியடைந்தது. ஆனால் அதற்குள் ஜே.வி.பி.யின் பிரதான எதிரிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஹெல உறுமயவும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவதாக அளித்த வாக்குறுதியை ஜேவிபி மீறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டின.

2004 டிசெம்பரில் ஏற்பட்ட சுனாமியின் பின்னர், நோர்வே மற்றும் சர்வதேச சமூகத்தின் தலையீட்டுடன் வெளிநாட்டுஉதவிகளைப்பெறுவதற்காகவிடுதலைப் புலிகளுடன் இணைந்து சுனாமி நிவாரணக் குழுவை உருவாக்க சந்திரிகா தீர்மானித்தார். இந்த நேரத்தில், போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து சந்திரிகா விலக மறுப்பது தொடர்பாக ஜேவிபி அரசியல் குழுவில் (பொலிட்பீரோ) ஏற்கனவே விவாதங்கள் நடந்திருந்தன. சந்திரிகா விடுதலைப் புலிகளுடன் சுனாமி நிவாரணச் சபை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடச் சென்றபோது, ஜேவிபியின் அரசியல்குழு பற்றி எரிந்து கொண்டிருந்தது. சுனாமி நிவாரண பேரவை ஒப்பந்தத்தில் சந்திரிகா கையெழுத்திட்டால் ஜேவிபி அந்த ஆளும்தரப்பில் நீடிப்பது கடினம் என்று ஜேவிபி அரசியல்குழு முடிவு செய்தது. இதனால் சந்திரிகாவின் அரசில் இருந்து விலக முடிவு செய்தனர்.

இவ்வாறு ரணில் வகுத்த போர் நிறுத்த ஒப்பந்தத்தின் வலையில் சிக்காமல் ஜேவிபி தனது அரசியல் கன்னித்தன்மையைக் காப்பாற்றிக்கொண்டது. ஜேவிபி சந்திரிகாவின் ஆளும்தரப்பில் இருந்து விலகி, சுனாமி நிவாரண சபைக்கு எதிராக நீதிமன்றம் வரை சென்றது.

ரணில் கையொப்பமிட்ட போர்நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக முழு நாட்டையும் தூண்டிவிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி., ரணில் கையெழுத்திட்ட சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்திற்கு எதிராக முழு நாட்டையும் தூண்டிவிட்டு ஜனாதிபதிப் பதவியையும் பின்னர்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# இம்முறை ரணிலின் வலையில் சிக்கிய ஜேவிபி

4ம் பக்கத் தொடர்ச்சி...........

ஆட்சியையும் கைப்பற்றிக்கொண்டாலும் அந்த ஒப்பந்தங்களின் வலையில் இருந்து இந்தத் தடவை தப்பிக்க முடியவில்லை. ஜனாதிபதிப் பதவி மற்றும் ஆட்சி என அதிகாரங்களைக் கைப்பற்றியபோதும் ரணில்கையெழுத்திட்ட அதே நிபந்தனைகளின் கீழேயே



சர்வதேச நாணய நிதியத்–துடனான ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டி இருக்கிறது.

ரணிலின் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அநுரவும் ஜேவிபியும் ஒருபோதும் கூறவில்லை. ஆனால், ஒப்பந்தத்தை மாற்றி, மக்களுக்கு விதிக்கப்பட்ட தீங்கான வரிகளை நீக்குவோம் என்றார்கள். ஜேவிபியினரைப் போலவே சஜித்தும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் இதையே சொன்னார்கள். 2024 ஜனாதிபதித் தேர்தலில் நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மக்களுக்குச் சாதகமாக மாற்றியமைக்க 5.6 மில்லியன் மக்கள் அனுரவுக்கும் 4.3 மில்லியன் மக்கள் சஜித்துக்கும் வாக்களித்தனர். அந்த ஒப்பந்தத்தை அப்படியே அமுல்படுத்துவோம்என்றுகூறியரணில்2.2மில்லியன் வாக்குகளையே பெற்றார். உடன்படிக்கைக்கு எதிராக வாக்களித்ததற்காக நாமல் ராஜபக்சவுக்கும் 3 லட்சம் கிடைத்துள்ளது. உடன்படிக்கைக்கு எதிராக மக்கள் கருத்தை உருவாக்கிய திலித் ஜயவீரவும் ஒன்றேகால் லட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளார். அப்படிப் பார்த்தால் நாணய நிதியத்தின் உடன்படிக்கையை மாற்ற இலங்கையின் ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் வாக்களித்தனர்.

**‘தேசிய மக்கள் சக்தி அரசு இதை ஏன் ஜனம்எப்பிடம் சொல்லவில்லை..?’**

2005 சந்திரிகா– – புலிகள் ஒப்பந்தத்திற்கு எதிராக ஜேவிபி ஆளும்தரப்பிலிருந்து விலகி, தனது அரசியல் கன்னித்தன்மையை பாதுகாத்து, மஹிந்தவை தோளில் சுமந்து கொண்டு தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டதால் 2005இல் மஹிந்த ஜனாதிபதியானார். ஜேவிபி தலை குனிந்துசந்திரிகாவின் ஆளும்தரப்பில் இருந்திருந்தால், ஜேவிபி 2005 ஜனாதிபதித் தேர்தலுக்கு சிங்கம் போல் அல்ல, அடக்கப்பட்ட பூனைக்குட்டிகளைப் போல் சென்றிருக்கும்.

இன்று ஜனாதிபதி பதவியில் சந்திரிக்காவோ மஹிந்தவோ இல்லை. ஜேவிபி ஆளும்தரப்பைவிட்டு வெளியேறியபோது சந்திரிக்கா ரணிலின் ஒப்பந்தத்தை பாதுகாத்தது போல், இன்று ஜேவிபி தலைவரும் ஜேவிபியும் ரணிலின் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தை பாதுகாக்க வேண்டியுள்ளது. இதன் மூலம் ஜேவிபி தனது அப்பழுக்கற்ற அரசியல் தன்மையை இழந்துவருகின்றது.

# வெள்ளத்தில் மூழ்கும் மருதமுனை 65 மீ. பகுதிக்கு வடிகால் திட்டம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

மழைகாரணமாக வெள்ளத்தில் மூழ்கும் மருதமுனை 65 மீற்றர் சுனாமி மீள்குடியேற்றக் கிராம மக்களின் பாதுகாப்பு கருதி கல்முனை மாநகர சபையால் துரித கதியில் வடிகான்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இப்பிரதேச மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கி வருகின்ற வெள்ள அனர்த்த பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு இங்கு 05 முக்கிய இடங்களில் வடிகான்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்தத் திட்டத்தின் ஊடாக இப்பிரதேசத்தில் உள்ள அனைத்து வடிகான்களும் இணைக்கப்பட்டு வடிகான் கட்டமைப்பு முழுமைப்படுத்தப்படவுள்ளது.

இந்த வடிகான் நிர்மாணப் பணிகளை கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் செவ்வாய்க்கிழமை கண்காணிப்பு விஜயம் செய்து பார்வையிட்டார். இதன்போது இவ்வேலைத் திட்டத்தை துரிதமாக நிறைவு செய்யுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌசி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், தொழில் நுட்ப உத்தியோகத்தர் எம். சுகுமார் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

மழைகாலங்களில் வெள்ளத்தில் மூழ்கித்தத்தளிக்கும் மருதமுனை 65 மீற்றர் கிராமத்தின் நீண்ட காலப் பிரச்சினைக்கு கல்முனை மாநகர சபை மிகவும் கரிசனையுடன் தீர்வைப் பெற்றுத்தந்திருப்பதையிட்டு இப்பகுதி மக்களும் நலன் விரும்பிகளும் மாநகர ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.ள

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# 2022ஆம் ஆண்டு மாவீரர் தின நினைவேந்தல்; முன்னாள் நகரசபை உறுப்பினரிடம் விசாரணை

2022ஆம் ஆண்டு நடைபெற்ற மாவீரர் தின நினைவேந்தல் தொடர்பில் பருத்தித்துறை முன்னாள் நகரசபை உறுப்பினர் ஒருவரிடம் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவரும் பருத்தித்துறை நகரசபையின் முன்னாள் உறுப்பினருமான ப.சுரேஷிடமே செவ்வாய்க்கிழமை நான்கு மணித்தியாலங்களாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# குடத்தனை நெற்பயிர்களுக்கு மடிச்சுக்கட்டி நோய் தாக்கம்

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் தற்போது நெற்பயிர்களுக்கு மடிச்சுக்கட்டி நோய் பரவி வருகிறது.

அண்மையில் நாட்டில் பெய்த கன மழையின் பின்னரே பயிர்களிடத்தில் இந்நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

கடும் மழை காரணமாக பல இடங்களில் நெல் வயல்கள் அழிந்து நாசமாகியிருந்த நிலையில், தற்போது இயற்கை அனர்த்தங்களிலிருந்து தப்பித்த ஒரு சில வயல்களில் நெற்பயிர்களுக்கு மடிச்சுக்கட்டி நோய்தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளதுடன் மருந்து விசிறும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

# இந்திய முதலீட்டார்கள் 15 பேர் யாழ்ப்பாணம் வருகின்றனர்

யாழ்ப்பாணத்திற்கு 15 முதலீட்டாளர்கள் வருகை தர உள்ளார்கள் என்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரக முதன்மை நிர்வாக அதிகாரி ராம் மகேஷ் தெரிவித்தார்.

வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களம் யாழ்.இந்தியத் துணைத் தூதரகம் இணைந்து நடத்தும் வடமாகாண தொழில்துறை வர்த்தகச் சந்தை செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமானது.





மூன்று நாள்கள் நடைபெற உள்ள வட மாகாண தொழில்துறை வர்த்தக சந்தை நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நாடா வெட்டி திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் -

வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களம் பல்வேறு முயற்சிகளை செய்து உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தி வருகிறது. இதற்கு இந்தியத் துணை தூதரகம் உதவிகளை செய்து வருகிறது. உற்பத்திகளை சந்தைப்படுத்துகின்ற போது தான் உள்ளூர் உற்பத்தி வளர்ச்சி அடையும்.

அதற்கு இத்தகைய சந்தை வாய்ப்புகள், கண்காட்சிகள் உதவும். இவை மூலம் உற்பத்திகளை அதிகரிக்க செய்வதுடன் உற்பத்திகளை அடுத்த தரத்திற்குக் கொண்டு செல்வதற்கு ஊக்கப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

இந்தியத் தூதரகம் பல்வேறு விதமான உதவிகளை செய்து வருகிறது. குறிப்பாக கல்வி, கலாசாரம், வர்த்தகம் மற்றும் தூதரக உதவிகளை செய்து வருகிறது. குறிப்பாக அடுத்த ஆண்டு 2025 ஆண்டு முதல் வர்த்தக நிகழ்வுகள், தொழில் முயற்சிகளுக்கு உதவிகளை செய்யவுள்ளது.

அந்த வகையில் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக சுமார் 15 இற்கும் மேற்பட்ட இந்திய முதலீட்டாளர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்கள். மேலும் இந்திய துணைத் தூதரகம் ஊடாக இந்திய தொழில்நுட்பகைத்தொழிலுக்கான கற்கை நெறிகளை பயில்வதற்கான வாய்ப்புகளை வழங்கி வருகிறோம்.

இதனை பயன்படுத்த வேண்டும். இன்னும் பல கற்கை நெறிகளை கற்கமுடியும் ஆர்வமுடையவர்களை பங்குபற்ற ஊக்கப்படுத்த வேண்டும். - என்றார்.

இந்த கண்காட்சியில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், மற்றும் வடக்கு மாகாண தொழில்துறை பணிப்பாளர்கள், திணைக்கள அதிகாரிகள், சிறு தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டார்கள்.

யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றுவரும் இந்த சந்தை நிகழ்வில் மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை கலாசார நிகழ்வுகள் நடைபெற உள்ளதுடன் இந்த சந்தையில் நெசவு உற்பத்திகள், கைப்பணி உற்பத்திகள், உணவு உற்பத்திகள், ஆடை உற்பத்திகள், விவசாய உற்பத்திகள் தொழில்வழிகாட்டல் வியாபார ஆலோசனை உள்ளடங்கலாக 60 கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெறுவதோடு அனுமதி இலவசம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு தொற்று தீவிரம்

## வைத்தியர் கேதீஸ்வரன் தகவல்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோப்பாய் மற்றும் உரும்பிராய் பகுதிகளில் டெங்கு தொற்று தீவிரமடைந்துள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக டெங்கு தொற்று தீவிரமாகி வருகின்றது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 5 ஆயிரத்து 453 பேர் டெங்கு தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

செப்ரெம்பர் மாதம் 42 பேரும், ஒக்ரோபர் மாதம் 69 பேரும், நவம்பர் மாதம் 134 பேரும் டெங்கு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் நாளுக்கு நாள் டெங்கு தொற்று மிகவும் ஆபத்தானதாக மாறி வருகின்றமை தெளிவாகிறது.

யாழ்ப்பாணம், கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், சங்கானை, சாவகச்சேரி ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் டெங்குத் தொற்று பரவி வருகிறது.

குறிப்பாக, யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட கொழும்புத்துறையிலும் கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட உரும்பிராயிலும் டெங்குத் தொற்று மிக வேகமாக பரவி வருகிறது. - என்றார்.

# கனடா பாடும் மீன்கள் சமூகத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

(சகாதேவராஜா)



கனடா பாடும் மீன்கள் சமூகம் கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு தொகுதி உலருணவுப் பொதிகளை விநியோகிக்க உள்ளது.

அண்மையில் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட பெரு மழை வீழ்ச்சி காரணமாக, தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து அல்லலுறும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களுக்கு ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொருள்கள் வழங்குகிற இச் சேவை முடுக்கி விடப்பட்டுள்ளது.

கனடா பாடும் மீன்கள் சமூகத்தில் வெள்ள நிவாரண செயல் திட்ட நிதிப்பிரிவு இணைப்பாளர் நித்தி சிவானந்தராஜா இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சிவாநந்த பழைய மாணவர் சங்கம் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பூலாவெளி (கிரான்) வெல்லாவெளி பிரிவு மக்களுக்கும் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் ஆலையடிவேம்பு பிரதேச மக்களுக்கும் இவ் உதவி கிடைக்கப்பெறவுள்ளது என இணைப்பாளர் நித்தி சிவானந்தராசா மேலும் தெரிவித்தார்.

## பேச்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கைப் பிரகடனம் தொடர்பான விவாதத்தின் இரண்டாம் நாளான நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

சட்டத்தின் ஆட்சியை நிலை நாட்டுதல் மற்றும் நாட்டின் வளங்களை அழித்த ஊழல்வாதிகளுக்குத் தண்டனை வழங்குதல், இன வேறுபாடு சமய வேறுபாடு என்பவற்றை இல்லாதொழித்தல் ஆகியன மக்களுக்கு வழங்கிய பிரதான வாக்குறுதிகள், மக்களுக்கு வழங்கிய அவ்வாக்குதிகள் கட்டாயமாக நிறைவேற்றப்படும்

தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சமய தீவிரவாதம் தலை தூக்குவதற்கு எச்சந்தர்ப்பத்திலும் இடம் அளிக்கப்பட மாட்டாது. ஒரு நாட்டிற்கு பொருளாதார மற்றும் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு சட்டத்தின் ஆட்சி மிகவும் முக்கியமானது. சட்டத்தின் உரிமை மக்களுக்கு உரியது. செல்வம் மற்றும் அதிகாரத்திற்கு இணங்க மாற்றமடையும் சட்டம் ஒன்று அல்லது நபரொருவரின் தராதரம் பார்த்து மாற்றமடையும் சட்டம் இனியும் இருக்காது என்றும் ஜனாதிபதி அந்தக் கொள்கைப் பிரகடனத்தில் முன் வைத்தார் என்றார்.

## மாவீரர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுகூருவதற்கு உரிமையுண்டு என்பதே எங்கள் நிலைப்பாடாகும்.

தற்போதும் இது வேளங்கள் நிலைப்பாடாகும். வடக்கிற்கும் தெற்கிற்கும் இந்த நிலைப்பாடு பொருந்தும். எனினும் விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளதால் நினைவுகூரலின் போது அவர்களின் கொடிகள் இலச்சினைகளை பயன்படுத்த அனுமதியில்லை.

இதேவேளை சமூக ஊடகங்களை பயன்படுத்திதிட்டமிட்ட அடிப்படையில் தெற்கில் பிரச்சாரமொன்று முன்னெடுக்கப்பட்டது, இந்த பிரச்சாரத்திற்கு அவர்கள் 2018 - 2022 இல் எடுக்கப்பட்ட வீடியோக்களை பயன்படுத்தினார்கள். இனமுறுகலை ஏற்படுத்தும் நோக்கிலேயே இதனை செய்துள்ளனர் என்றார்.

## அரச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டுவருவதாக, திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.meteo.gov.lk நவம்பர் முதல் நாள் சைபர் தாக்குதலுக்கு உள்ளாகியது. பின்னர் அது மீள அரச கட்டுப்பாட்டுக்குக் கொண்-டுவரப்பட்டு இயக்கப்பட்டது.

நவம்பர் 12 அதன் மீது மீண்டும் சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில், இணையத்தளம் மீட்கப்பட்டதாக இலங்கை கணினி அவசர பதிலளிப்பு மன்றம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், குறித்த இணையத் தளத்தின் மீது மீண்டும் மூன்றாவது தடவையாகவும் சைபர் ஊடுருவல் இடம்பெற்றுள்ளது.

## சர்ச்சைக்குரிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றிய முஜிபூர் ரஹ்மான் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவம், தாஜுதீன் படுகொலை தொடர்பில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மானின் உரையை தொடர்ந்து எழுந்து உரையாற்றிய ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான நளிந்த ஜயதிஸ்ஸ,கடந்த காலங்களில் சர்சைக்குரியதாக பேசப்பட்ட தாஜுதின் படுகொலை, உட்பட ஏனைய படுகொலைகள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம்.

தொழில்நுட்ப காரணிகளால் கடந்த காலங்களில் குறித்த தரவுகளை பெற்றுக்கொள்வதில் மாதம் ஏற்பட்டது. ஆனால் தற்போது அந்த தரவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆகவே முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும் என்றார்.

## வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எப்.எல்-4 அனுமதிப்பத்திரங்களும் இவ்வாறு அப்போதைய ஜனாதிபதியின் கீழிருந்த நிதியமைச்சின் மூலமாக வழங்கப்பட்டுள்ளன என்றார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இந்த மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் விவகாரம் பெரும் சர்ச்சையாக வெடித்திருந்தது. தமிழர் அரசியலிலும் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. வழங்கப்பட்ட மதுபானசாலைகளுக்கான அனுமதிகளையும் அவற்றுக்குப் பரிந்துரை செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பகிரங்கப்படுத்தும்படி பலரும் வலியுறுத்தி வந்தனர்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இந்த விடயத்தை மீண்டும் நினைவூட்டினார். இதனைத் தொடர்ந்தே மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ள விவரம் நேற்று வெளியிடப்பட்டது. ஆனால், அந்த மதுபான நிலைய அனுமதிகள் எந்தெந்த நாடாளுமன்ற உ-றுப்பினர்களின் பரிந்துரையின் பேரில் வழங்கப்பட்ட என்ற விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

அந்த விவரங்கள் வெளியிடப்படும் என்று தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்பாகத் தெரிவித்திருந்தது.

## 3 பல்கலைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ பாளி வளாகம் மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பீடங்கள் மற்றும் துறைகளின் பெயர்கள் மாற்றப்பட்டு விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1) என்னும் பிரிவினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் பேரில் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அட்டவணையின் நிரல் 1இல் காணப்படுகின்ற 'வணிகம் மற்றும் முகாமைத்துவப் பீடம்' என்னும் விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள நிரல் 11 இல் காணப்படுகின்ற முகாமைத்துவத் துறையானது, கணக்கியல் மற்றும் நிதித் துறை என பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

## சாணக்கியன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படவில்லை. ஆகவே அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

இப்போதும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பயன்படுத்தப்படுகின்றது எனவே அரசு உடனடியாக இந்தப் பிரச்சினையை தீர்க்க வேண்டும். இதேவேளை காணாமல் போனோரின் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக இந்தக் குற்றத்தைச் செய்தோர் தண்டிக்கப்பட வேண்டும். இவ்விடயம் தொடர்பில் அரசு வகைப்பொறுப்புக்கூற வேண்டும் என்பதுடன் அரசின் நிலைப்பாட்டையும் அறிவிக்கவேண்டும்.

அதேபோல் மகாவலி அதிகாரசபை, தொல்பொருள் திணைக்களம் போன்றவற்றால் சிங்கள மக்களுக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் இல்லை .ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 8 மாவட்டங்களை சேர்ந்த தமிழ் மக்களும் இவற்றால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே தமிழ் மக்களின் காணிப்பிரச்சினைகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும்.

படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் காணிகளிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும் இந்த அரசு மூடப்பட்டிருந்த சில வீதிகளை திறந்துள்ளது அதனை வரவேற்கின்றோம். இன்னும் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

மாகாணசபைகள் என்பது முக்கியமானது. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகசந்திப்பில் தெளிவு படுத்தியுள்ளதால் அது தொடர்பில் நான் மேலும் பிரஸ்தாபிக்கவில்லை.

ஆனால் இந்த அரசு உருவாக்கவுள்ள புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்கான அனைத்து உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கும் சம உரிமையுள்ளது எனவே அந்த சம உரிமைகள் புதிய அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் எம்மிடம் தகவல்கள் உள்ளன. குற்றப் புலனாய்வு பிரிவுக்கு பிள்ளையான் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். பின்னர் எதனையும் காணமுடியவில்லை. இந்த தாக்குதல் தொடர்பில் பாராளுமன்றத்தில் கூட நாம் பல தகவல்களை முன்வைத்துள்ளோம்.

பிள்ளையான் செய்த விடயங்கள் தொடர்பிலும் நாம் கூறினோம். முன்னைய அரசுகள் எதனையும் செய்யவில்லை.

அத்துடன் மதுபானசாலை அனுமதிகள் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. வடக்கு அரசியல்வாதிகளும் பெற்றுள்ளார்கள் என்று கூறப்படுகிறது. அந்த அனுமதிகளை பெற்றவர்களின் பட்டியலை ஏன் இதுவரை அரசாங்கம் வெளியிடவில்லை. அவ்வாறானவர்களை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த அரசை வீழ்த்துவதோ எதிர்ப்பதோ எமது நோக்கம் அல்ல. அரசின் முற்போக்கான நடவடிக்களுக்காகக் காத்திருக்கின்றோம்.சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார்.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு அறிவித்துள்ளது.

நிதிப் பற்றாக்குறை காரணமாக மூன்று மாதங்களுக்கும் மேலாக இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஒவ்வொரு பொலிஸ் அதிகாரியும் குறைந்தபட்சமாக 28,500 ரூபா உதவித் தொகையைப் பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த நிலுவைத் தொகையை செலுத்தும் பணிகள் அடுத்த வாரத்திற்குள் ஆரம்பிக்கப்படும் என பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்

## ஸ்டெம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகடனத்தில் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி குறித்து குறிப்பிட்டிருந்தார். இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்தினால் சர்வதேச தகவல் தொழில்நுட்ப துறையில் முன்னிலை வகிக்க முடியும்.

இலங்கையின் கல்வி கட்டமைப்பில் ஸ்டெம் கல்வி கட்டமைப்பை அறிமுகப்படுத்த வேண்டும். இதனூடாக நாட்டில் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ள முடியும். தகவல் தொழில்நுட்பத்தை துரிதமாக மேம்படுத்தினால் 2030 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் 5 பில்லியன் டொலர் வருவாயை திரட்டிக் கொள்ள முடியும் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளராக சுகுணனுக்கு நியமனம்

(சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக மருத்துவர் குணசிங்கம் சுகுணன் நேற்று (புதன்கிழமை) பதவியேற்றார்.

முன்னதாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அளப்பரிய சேவையாற்றிய இவர், இடமாற்றம் பெற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக கொரோனா காலகட்டத்தில் சிறப்பாக சேவையாற்றினார்.

பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதில் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக கடமையாற்றிய இவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளராக பணியாற்றினார்.



தற்போது அங்கிருந்து இடமாற்றலாகி கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு நேற்று (புதன்கிழமை) காலை பதவியேற்றார்.

பதவியேற்பு நிகழ்வில் முன்னாள் பணிப்பாளராக கடமையாற்றிய வைத்தியர் ரங்க சந்ரசேன கலந்து கொண்டார்.

# அனைத்து பல்கலைக்கழக நூலக பொது ஊழியர் சங்க 9ஆவது பொதுக்கூட்டம் தென்கிழக்குப் பல்கலையில்

(அமீர்)

அனைத்து பல்கலைக்கழக நூலக பொது ஊழியர் சங்கத்தின் ஒன்பதாவது பொதுக்கூட்டம் அண்மையில் தென்கிழக்கு பல்கலைக்கழக அஷ்ரப் ஞாபகார்த்த பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் எஸ்.ஆர். சோமரத்ன தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகர் எம் எம் றிபாயூத்தீன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

விஷேட அதிதிகளாக சிரேஷ்ட உதவி நூலகர் எம் சி எம் அஸ்வர், சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி எம் எம் மஸ்ரூபா, ஏ ஏ எம் நஃபீஸ், எஸ். எல்எம் சஜீர் ஆகியோரும் அதிதிகளாக தகவல் தொழில்நுட்ப வலை அமைப்பு அஸ்லாம் சஜித் மற்றும் நூலக உதவியாளர் சி எம் ஏ முனாஸ் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வின் வரவேற்புரையை பல்கலைக் கழக நூலக பிரதிநிதி ஏ சி எம் முபாரக் நிகழ்த்தினார். நிகழ்வுக்கு இலங்கையில் உள்ள 17 பல்கலைக்கழகங்களில் இருந்தும் ஊழியர்கள் கலந்து கொண்டிருந்தனர். நூலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பலர் அரச சேவையிலிருந்து பணியாற்றி ஓய்வு பெறுவதற்கான கௌரவமும் விருந்தும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இதன் இரண்டாவது அமர்வில் 2024 /2025 ஆண்டுக்கான புதிய நிர்வாக தேர்வில் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் -

தலைவர்: எஸ் ஆர் சோமராத்தன - கொழும்பு பல்கலைக்கழகம்.

செயலாளர்: அசித்த குமார பேராதனை - பல்கலைக்கழகம்.

பொருளாளர்: டி எஸ் ஆர் திசாநாயக்க - ராஜரட்ட பல்கலைக்கழகம்

உப தலைவர் ஈ எல் ஏ சுபியான் தென்கிழக்கு பல்கலைக்கழகம்

ஆலோசகர் ஆர் எம் தம்பவித்த ரஜரட்டை பல்கலைக்கழகம்.

ஆலோசகர் றசாக் முஹம்மத் அலி. தென்கிழக்கு பல்கலைக்கழகம்

ஒருங்கிணைப்பாளர் எம் பிரியந்த - றுகுணு பல்கலைக்கழகம்

ஏனைய ஒவ்வொரு பல்கலைக் கழகங்களுக்குமான இணைப்பு உதவி செயலாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

1. சிறிதரன்-பேராதனை பல்கலைக்கழகம்
2. ஏ சி எம் முபாரக் - தென்கிழக்கு பல்கலைக்கழகம்
3 உப்புள் பிரியந்த - மெறட்டுவை பல்கலைக்கழகம்
4 நிமால் குணத்திலக்க - சப்ரகமுவ பல்கலைக்கழகம்
5 சத்துரங்க அபேசேகர - றஜறட்ட பல்கலைக்கழகம்
6 எம் திசாநாயக்க - வயம்ப பல்கலைக்கழகம்
7 எல் சி ஜயானாத் - றுஹுனு பல்கலைக்கழகம்
8 என் விஜயசூரிய - களனி பல்கலைக்கழகம்
9 நிசாந்த - திறந்த பல்கலைக்கழகம்.

ஆகியோர் தெரிவாகினர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# எட்டு உயிர்களைக் காவுவாங்கிய பாதை தொடர்பில் அரச அதிகாரிகள் இன்னும் கண்டுகொள்ளவில்லை

## நாடாளுமன்றத்தில் அஷ்ரப் தாஹிர் எம்.பி தெரிவிப்பு



வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கு சில நாள்களுக்கு முன்பு நாட்டில் இவ்வாறானதொரு இடர் ஏற்படபோகிறது என வளிமண்டலவியல்திணைக்களம் அறிவித்திருந்தபோதும் அப்பிரதேசத்தில் உள்ள அரச அதிகாரிகள் அப்பிரதேசத்தை பாதுகாக்கஎடுத்தநடவடிக்கைகள் என்ன என்பதை இந்த இடத்தில் நான்வினயமாககேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.அதேபோல்மாவடிப்பள்ளி பாலம், கிட்டங்கிபாலம் ஆகியபாலங்கள் சரியாக நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக வெள்ள நிலைமைகளின் போது அப்பகுதியில் உயிர் ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும் எட்டு உயிர்களை காவுவாங்கிய பாதையை அரச அதிகாரிகள் இன்னும் கண்டுக்கொள்ளவில்லை எனவும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிக்கையில் -

இம்முறை ஏற்பட்ட உயிர் சேதம் போன்று இன்னுமொரு முறை இடம்பெறாமல் எதிர்காலத்தில் முன் எச்சரிக்கைநடவடிக்கைகளைமேற்கொள்ள கவனம் செலுத்தவேண்டும் எனவும் அரசாங்கத்தை கேட்டுக்கொண்டார்.

கடந்த அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட அஸ்வெசும திட்டத்தால் வறுமைக்கோட்டில் வாழ்கின்ற மக்கள் இன்னும் பாதிப்புக்குள்ளான நிலைமையையே அவதானிக்க முடிகிறது.

அந்தத் திட்டமானது அப்போதைய அரசாங்கத்தை தக்க வைப்பதற்காக கொண்டுவரப்பட்ட மக்களுக்கு பொறுத்தமற்றவொன்றாகும்.

இது விடயம் குறித்து இப்போதைய அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

கடந்தஅரசாங்கத்தின்ஆட்சிக்காலத்தில் அரசியல்அதிகாரம்மூலம்நியமிக்கப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் குறித்தநடவடிக்கைகளைஇந்தஇரசாங்கம் இதுவரைமுன்னெடுக்கவில்லைஎன்பதை சுட்டிக்காட்டியவர், இதுவிடயம் குறித்தும் கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

# கடையைத் திருடிவிட்டு அந்தப் பொருள்களை வேறு கடைக்கு விற்கச்சென்ற ஒருவர் கைது

(பர்ஸான்)

சில்லறைக் கடை ஒன்றை உடைத்து அங்கிருந்த பொருள்களை திருடி வேறு கடை ஒன்றுக்கு விற்பனை செய்ய சென்ற திருடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடி பகுதியிலுள்ள சில்லறைக் கடை ஒன்று திங்கட்கிழமை இரவு திருடப்பட்டிருந்தது.

திருடப்பட்டிருந்தகடையை வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்தபண்டாரநேரில்சென்று பார்வையிட்டுதிருடர்களைப் பிடிப்பதற்குநடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், பொருள்களைக் கொள்ளையிட்ட திருடர்கள் இருவர் பொருள்களை ரிதிதென்னை பகுதியிலுள்ளகடை ஒன்றுக்கு விற்பனைக்காக எடுத்துச் சென்ற போது ஒருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில் ஒருவர் வாழைச்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


# வெலம்பொடை முஸ்லிம் ம.வி. தேசிய கிக்பொக்சிங் சம்பியன்



2024 நவம்பர் மாதம் 29 ஆம் திகதி முதல் டிசெம்பர் முதலாம் திகதி வரை நாவலப்பிட்டிய ஜயதிலக்க விளையாட்டரங்கில் நடைபெற்ற அகில இங்கைகிக்பொக்சிங் போட்டித்தொடரில் 12 வயதுக்குட்பட்ட பிரிவில் ஹூஎம்.என். நபீர் அஹமட் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

வெலம்பொடை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் இந்த மாணவர் வெலம்பொடையைச்சேர்ந்த நலீம் - நசீரா தம்பதியினரின் புதல்வராவார்.




இந்த வருடம் தங்கப் பதக்கம் வென்ற இந்த மாணவர் கடந்த வருடமும் அதற்கு முன்னையவருடமும் நடந்த போட்டிகளில் முறையே தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார்.

கம்பளையைச் சேர்ந்த நவ்ஷாத் இந்த மாணவரின் பயிற்றுப்பாளராக செயற்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் சங்குவேலி மக்களுக்கு உதவிகள்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் 1983 சாதாரணதர பழைய மாணவர்களின் நிதி அனுசரணையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட - வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட - சங்குவேலி பகுதியிலுள்ள 10 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் க.டினேஷின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாவகச்சேரி லயன்ஸ் கழக சிரேஷ்ட உறுப்பினர் லயன் ஆ.ஜெயபாலன், வலி.வடக்கு பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும் சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளருமான லயன்







சி.ஹரிகரன், லயன் ராஜினி டினேஸ் ஆகியோர் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கிவைத்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# பசுமை புரட்சி செய்துவரும் சம்மாந்துறை மின்மினி மின்ஹாவுக்கு 'பசுமை விதை செம்மல் விருது–24'

(நூருல் ஹுதா உமர்)

இந்திய தமிழ்நாடு, திண்டுக்கல் மாவட்ட 'பசுமை வாசல் பவுண்டேஷன்' அமைப்பின் ஐந்தாம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட மரக்கன்றுகள் நடும் போட்டியில் வெற்றி பெற்ற கமு/சது/அல்-அர்சத் மகா வித்தியாலயத்தில் தரம் எட்டில் கல்வி கற்று வரும் இலங்கையின் இளம் பசுமை மீட்சி செயற்பாட்டாளர் மின்மினி மின்ஹாவுக்கு 'பசுமை விதை செம்மல் விருது-2024' வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது 10 வயதிலிருந்து மாவட்ட, தேசிய மட்ட, சர்வதேச மட்டங்களில் 25 இற்கும் மேற்பட்ட விருதுகளையும், கௌரவ பட்டங்களையும் பெற்றுக் கொண்ட சிறுமி ஆவார்.



10 லட்சம் நபர்களை இலக்காகக் கொண்டு 'சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வு உரையை நிகழ்த்தி வரும் ஆசிய நாடுகளில் மிக வயது குறைந்த சிறுமி' என்ற சாதனைக்குரிய இவர் சுயாதீன முறையில் கல்வி, நிர்வாக உயரதிகாரிகளின் அனுமதியுடன் சுற்று சூழல் தேசிய வேலைத் திட்டத்தின் ஓரங்கமாக பாடசாலை மாணவர்கள், அரச அதிகாரிகள் முன்னிலையில் விழிப்புணர்வு உரையையும் மேற்கொண்டு வருகிறார்.




# பெண் சமூகசெயற்பாட்டாளர் அஞ்சலிதேவி சி.ஐ.டியினரால் விசாரணைக்கு அழைப்பு

மூதூர் பகுதியைச் சேர்ந்த பெண் சமூக செயற்பாட்டாளர் அஞ்சலிதேவி சி.ஐ.டியினரால் விசாரணைக்காக நேற்று (புதன்கிழமை) அழைக்கப்பட்டுள்ளார்.

மூதூர் முன்னம்போடிவெட்டை பகுதியைச்சேர்ந்தசமூகசெயற்பாட்டாளர் நவரத்தினராசா அஞ்சலிதேவி (வயது - 60) என்பவருக்கு திருகோணமலை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை காலை 10.00 மணியளவில் திருகோணமலைபழைய பொலிஸ்நிலைய பகுதியில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவுக்கு வருகை தருமாறு எழுத்து மூலமாக





அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த நபர் கடந்த பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி திருகோணமலை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.12.2024இல் வெளியிடப்பெற்றது